**செய்தி வெளியீடு எண்: 527** **நாள்:14.11.2016**

## செய்தி வெளியீடு

சார்ஜாவில் உள்ள தனியார் நிறுவனத்தின் உள்வடிவமைப்பு பிரிவிற்கு 30 முதல் 35 வயதிற்குட்பட்டு மூன்று வருட பணி அனுபவத்துடன் டிப்ளமோ தேர்ச்சி பெற்ற சிவில் மேற்பார்வையாளர்கள் (மாத ஊதியம் ரூ.63,875/- முதல் ரூ.82,125/- வரை), இரண்டு வருட ஐடிஐ சான்றிதழ் பெற்ற எலக்ட்ரிசியன்கள் (மாத ஊதியம் ரூ.36,500/- முதல் ரூ. 40,150/– வரை) மற்றும் எச்விஏசி டெக்னிசியன்களும் (மாத ஊதியம் ரூ.27,375/– முதல் ரூ.32,850/– வரை) அலங்காரப் பொருட்கள் மற்றும் விற்பனையகத்திற்கு பொருத்துதல் தொடர்பான பணிகளில் அனுபவம் உள்ள ஸ்டீல் பேப்ரிகேட்டர்கள் (மாத ஊதியம் ரூ.23,725/– முதல் ரூ.27,375/– வரை) தேவைப்படுகிறார்கள்.

மேலும், பத்தாம் வகுப்பு தேர்ச்சி மற்றும் ஐடிஐ சான்றிதமுடன் கடைகள், சில்லறை விற்பனையகங்கள், உணவகங்கள் ஆகியவற்றில் உள் அலங்கார பொருத்துதல் வேலைகளில் மூன்று வருட பணி அனுபவமுள்ள ஜிப்சம்/மர தச்சர்கள், மர பெயிண்டர்கள், சுவர்/கான்கீரிட் பெயிண்டர்கள், டைல்ஸ் கொத்தனார்களும் (மாத ஊதியம் ரூ.23,725/- முதல் ரூ.27,375/- வரை) தேவைப்படுகிறார்கள்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு இலவச இருப்பிடம் மற்றும் அந்நாட்டின் சட்டதிட்டத்திற்குட்பட்ட இதர சலுகைகளும் வழங்கப்படும்.

தகுதியுடையவர்கள் தங்களின் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வி, அனுபவம், செல்லத்தக்க பாஸ்போர்ட் மற்றும் வெள்ளை நிறப் பிண்ணனியில் எடுக்கப்பட்ட மூன்று புகைப்படத்துடன் **16.11.2016** மற்றும் **17.11.2016** ஆகிய நாட்களில் எண்.**42**, ஆலந்தூர் சாலை, ஒருங்கினைந்த வேலைவாய்ப்பு அலுவலக வளாகம், கிண்டி, சென்னை **600 032**ல் அமைந்துள்ள தமிழக அரசு நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு ஏதாவது ஒரு நாளில் காலை **9** மணிக்குள் நேரில் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களை அறிய **044**-22505886/22502267/22500417 என்ற தொலைபேசி எண்களில் அறிந்து கொள்ளலாம்.

இந்நிறுவனத்தின் பதிவு சான்றிதழ் எண். B-0821/CHENNAI/ CORPN/ 1000+/ 5/ 308/84 ஆகும்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**